

■ ஊட்டி தாவரவியல் பூங்காவில் நடந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில், மாணவர்கள் மத்தியில், நடிகர் விவேக் பேசினார்.

# சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடிகர் விவேக் அறிவுரை

**ஊட்டி, நவ. 21–** ஊட்டியில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த நிகழ்ச்சிகளில் நடிகர் விவேக் பங்கேற்றார்.

ஊட்டியில், மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறை சார்பில், சுற்றுச்சூழல், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி, நேற்று நடந்தது.

நடிகர் விவேக், மார்லிமந்து அருகே, உல்லத்தி சாலையில் மரக்கன்று நட்டு, நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

ஊட்டி தாவரவியல் பூங்காவில் நடந்த நிகழ்ச்சியில், மாணவர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளிடையே, இவர் பேசுகையில், ''நீலகிரி மாவட்டத்தின் சீதோஷ்ண நிலை, பல்லுயிர் சூழலுக்கு ஏற்றவாறு அமைந்துள்ளதால், 'யுனெஸ்கோ' நிறுவனம், சிறந்த உயிர் சூழல் மண்டலமாக அறிவித்துள்ளது.

''இங்கு, பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தடுக்க வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு அனைவரும் முக்கியத்துவம் வழங்க வேண்டும்,'' என்றார்.

ஊட்டி சேரிங்கிராஸ் பகுதியில், ஹெல்மெட் அணிவது மற்றும் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். கலெக்டர் இன்னசென்ட் திவ்யா, எஸ்.பி., சண்முகப்பிரியா, நகராட்சி கமிஷனர் நாகராஜ், தோட்டக்கலை துணை இயக்குனர் சிவசுப்ரமணி உட்பட பலர் பங்கேற்றனர்.